103356

7 - நவ 2017

<u>சுருக்கம்</u>

பள்ளிக்கல்வி – மேல்நிலைக் கல்வி – மேல்நிலை முதலாம் ஆண்டு (+1) மாணவர்களுக்கு மாநில அளவில் பொதுத் தேர்வு நடத்த ஆணை வெளியிடப்பட்டது – மேல்நிலை முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வு நடத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக்கல்வி(ஜிஇ.1)த் துறை</u>

அரசாணை (நிலை) எண்.227

நாள் : 06.11.2017.
திருவள்ளுவர் ஆண்டு , 2048
ஹேவிளம்பி வருடம், ஐப்பசி 20,

படிக்கப்பட்டவை :-

For circulation CEO/DEO/RDU
6/11/2017

1. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வி (அ.தே.1)த் துறை, நாள்.22.05.2017.
2. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கடிதம், ந.க.எண்.2592/D2/2017, நாள். 28.09.2017.

------

<u>ஆணை:–</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–2018–ஆம் கல்வியாண்டிலிருந்து மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் மாநில அளவில் அரசுப் பொதுத்தேர்வுகள் நடத்தப்படும் என ஆணை வெளியிடப்பட்டது. அவ்வரசாணையின் பத்தி 12(எ)–ல் முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வினை இரண்டாம் ஆண்டு நடைபெறும் செய்முறைத் தேர்வுடன் இணைத்து நடத்தலாம் என உத்திரவிடப்பட்டது.

2. இதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள் குறித்து அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்தினை தொடர்ந்து பார்வையிரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மேல்நிலை முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வினை அவ்வாண்டிலேயே நடத்துமாறு பார்வையொன்றில் படிக்கப்பட்ட அரசாணைக்கு உரிய திருத்தம் வெளியிடுமாறு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 12 (எ) மற்றும் அதன் பிற்சேர்க்கை – 1 ஆகியவற்றிற்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது :–

திருத்தம்

(அ) மேற்காணும் அரசாணையில், பத்தி 12 (எ) –வில் "முதலாம் ஆண்டு, செய்முறைத் தேர்வினை இரண்டாம் ஆண்டு நடைபெறும் செய்முறைத் தேர்வுடன் இணைத்து நடத்தப்படும்." என்பதற்கு பதிலாக "முதலாம் ஆண்டு செய்முறைத் தேர்வினை அவ்வாண்டு பொதுத் தேர்வுடன் இணைத்து நடத்தப்படும்" என திருத்தி வாசிக்கவும்.

த.பி.பா.

(ஆ) மேலும், மேற்படி அரசாணையின் இணைப்பு 1–ல், மேல்நிலை முதலாமாண்டு செய்முறை தேர்வுகள் குறித்து 20 மதிப்பெண்கள் குறித்து இடப்பட்ட "@ குறியீட்டிற்கு" கொடுக்கப்பட்ட விளக்கத்தினை நீக்கம் செய்து அதனை கீழ்க்கண்டவாறு படிக்கவும் :–

" @ முதலாமாண்டு செய்முறைத் தேர்வுகள், அவ்வாண்டு பொதுத்தேர்வுடன் இணைத்து நடத்தப்படும்."

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6.
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குர், சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை–6.
நகல் :
பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

6/11/17.
பிரிவு அலுவலர்.